பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை 29.10.2021 கதிர் 358

இனி இது ரகசியம் அல்ல!

அரசியல் தெரியாத கோட்டா பய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இராணுவ அதிகாரி போலக் கையாளப்புறப்பட்டமையின் விளைவை - விபரீதத்தை - இன்று நன்கு படிக்க ஆரம்பித்திருக்கின்றார். அரசியலில் எதிர் 2

## 11 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிப்பு!



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பகுதியில் இராணுவ வசம் இருந்த 11

## 'மொட்டு'வின் கூட்டத்தில் நடந்ததென்ன?

யுகதனவி அனல் மின் நிலையம் தொடர்பில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்திற்கு அவதானிப்புகளை முன் வைப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் நேற்று மாலை கூடிய ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணி கட்சித் தலைவர்கள் மத்தியில் ஒப்புதல் எட்டப்பட்டுள்ளது எனப் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள 11

## 13ஐ வலியுறுத்தக் கோரும்

# ரெலோவின் கூட்டத்தில் தமிழரசு பங்குபற்றாது!

## மத்திய குழுவை 6ஆம் திகதி கூட்டவும் முயற்சி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 29

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு இந்தியாவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தல் என்ற நோக்கத்தின் பெயரில் வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் ரெலோ கூட்டியுள்ள கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்குபற்றாது. 2



## வாசுவின் இரண்டு இணைப்பாளர்களுக்கு பூநகரியில் 190 ஏக்கர் அரச காணி தானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.29

நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இணைப்பாளர்கள் இருவருக்கு பூநகரியில் 190 ஏக்கர் அரச காணி அனுமதிப் பத்திரம் வழங்கிக் கையளிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆளுகையில் உள்ள காணிகளில் இருந்தே இந்த 190 ஏக்கர் காணியும் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இணைப்பாளர்கள் இருவரில் ஒருவாருக்கு 130 ஏக்கரும், மற்றவருக்கு 60 ஏக்கரும் என்ற அடிப்படையில் கொழும்பு அனுமதியின் பெயரில் இந்தக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது.

விவசாய நடவடிக்கைகளுக்கு முதல் கட்டமாக 30 ஆண்டுகள் குத்தகை என்னும் அடிப்படையில் இந்த நிலங்களை ஆணைக்குழு வழங்கியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## பார்த்தியிடம் 5 மணிநேரம் ரி.ஐ.டியினர் விசாரணை!



யாழ்ப்பாணம் மாநகரில் தண்டப்பணம் அறவிடும் நடைமுறையைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்ட யாழ்.மாநகர உத்தியோகத்தர்கள் ஐந்து பேருக்கும் சீருடையை வடிவமைத்துப் பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன் யாழ். பயங்கரவாத விசாரணைப் 2

## தமிழ்பேசும் மக்களை நாட்டிலிருந்து விரட்டுவதா இந்த அரசின் நோக்கம்?

### முன்னாள் எம்.பி. சுரேஷ் கேள்வி




(இ.கலையமுதன்)

தமிழர்களையும் முஸ்லிம்களையும் இந்த நாட்டில் இருந்து விரட்டுவதும், அவர்களுக்கு எதுவுமே இல்லாமல் செய்வதும் தான் அரசின் நோக்கமா?

– இவ்வாறு கேள்வி 11

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற குழுவை உடனே கலைக்கவும்

### கோட்டாவிடம் சிவாஜி வலியுறுத்து

(இ.கலையமுதன்)

ஒரு நாடு ஒரு சட்டம் என்று கூறும் குழுவை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான 11

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் குற்றவாளிகளை உடன் நிறுத்து!

### முல்லைத்தீவில் நேற்றுப் பெரும் போராட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கொரோனா சுகாதார வழி காட்டல்களைப் பின்பற்றி இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2

## ஞானசார செயலணியில் மூன்று தமிழர்களுக்கும் இடம்!

### ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அரசு தீர்மானம்



ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை அமுலாக்கும் வகையில் ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் மூன்று தமிழர்களை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

மேற்படி செயலணியில் தமிழ் உறுப்பினர்கள் இல்லையென்பதை நேற்று மாலை நடந்த ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து வடக்கு , கிழக்கு , மலையகப் 2

## மரணம் 22 தொற்று 540

இலங்கையில் மேலும் 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 9 ஆண்களும், 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தரப்பில் இருக்கும் எதிரியால்தான் பலர் வீழ்த்தப்படுவார்கள். ஆனால் எதிர்த் தரப்பில் பலமான எதிரியே இல்லாத நிலையில் – தனக்குத் தானே அரசியல் துவந்த யுத்தம் நடத்தி – செல்வாக்கை இழந்து வருபவர் என்றால் அது கோட்டாபய ராஜபக்ஷதான்.

முட்டாள்தனமாக நடந்து, தமக்குத் தாமே அரசியல் சரிவை அவர் தேடி சம்பாதித்துக் கொள்கின்றார் என்றுதான் படுகின்றது. இதை நான் சொல்லவில்லை. கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை "ஜனாதிபதி பைத்தியக் காரத்தனமாக செயற்படுகின்றார்" – என்று கூறும் ஒரு வீடியோ சமூக வலைத் தளங் களில் உலா வருகின்றது. அதைத் தான் கூறினேன்.

சரியோ, பிழையோ மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது 2015 ஜனவரி வரை அவருக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடியவர்கள் கூட மிக எச்சரிக்கையாகவே காய் நகர்த்தினர். தென்னிலங்கையில் அவருக்கு எதிரான அரசியல் ஆர்ப்பாட்டங்களில் அப்போது கொடும்பாவிகள் எரிக்கபடுவதில்லை.

ஆனால், இப்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது. ஆரம்பத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்தகமகேயின் கொடும்பாவியைத்தான் விவசாயிகள் எரித்தனர்.

ஆனால், இப்போது தெற்கில் பெரும்பாலும் ஒவ்வொரு நகரத்திலும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், கவனவீர்ப்புகள், எதிர்ப்பு நிகழ்வுகள் தாராளமாக நடக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே போன்ற அரசின் மூத்த தலைவர்களின் கொடும்பாவிகள் பாடை கட்டி இழுத்துச் செல்லப்பட்டு, செருப்படி அபிஷேகம் நடத்தி எரிக்கப்படுகின்றன. இது வாடிக்கையாகி விட்டது.

இந்த எதிர்ப்புப் பேராட்டங்கள் எதிர்க் கட்சிகளின் கிளர்ச்சியால் ஏற்பட்டவை அல்ல. அரசுக்கு எதிரான மக்கள் உணர்வை ஒற்றுமைப்படுத்தி, வழிப்படுத்தி, பேரெழுச்சியாக மாற்றும் கரிஸ்மா மிக்க – கவர்ச்சி மிக்க – தலைவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இல்லை.

எனினும் ஆளும் தரப்புக்கு எதிரான மக்கள் எழுச்சி தத்தம் பாட்டில் சுயேச்சையாக எழுச்சியுடன் கிளம்புவது நோக்கப்படுகின்றது.

சர்வாதிகாரியாக மாறுவார் என எதிர்பார்க்கப்பட்டவர் இப்போது விதூஷகராகி (Joker) விட்டார் என்று சில முகப் புத்தகப் பதிவுகள் உரைக்கின்றன.

ஆம், 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற அரசின் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி செயலணிக்கான தலைவராக சர்ச்சைக்குரிய – குழப்படிகார – பிக்குவான வண. கலகொட அத்த ஞான சார தேரரை நியமித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயல் அப்படியான எண்ணத்தைத்தான் தந்து நிற்கின்றது.

பௌத்த, சிங்கள மக்கள் மத்தியிலும் தனது செல்வாக்கு மோசமாக வீழ்ச்சியடைந்து வருவதைக் கண்ணுற்று, அதை எப் படியும் மீட்க வேண்டும் என்ற Desperation (விரக்தியில்) இருக்கின்றார் ஜனாதிபதி. அதனால்தான் பௌத்த, சிங்களப் பேரின வாத வெறியில் அலையும் ஞானசாரரைப் பிடித்து வந்து இந்தச் செயலணிக் கான தலைமைப் பதவியை அவருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியிருக்கின்றார் என்கின்றன விடய மறிந்த வட்டாரங்கள்.

இதற்கிடையில் –

கெரவலப்பிட்டியில் யுகதனவி மின்சார நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு கைமாற்றுவது என்ற – சர்ச்சைக்குரிய – அரசின் தீர்மானம் குறித்து ஆளும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியுடன் நேரடியாகப் பேச மாட்டோன் என்று அடம் பிடித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த இறுக்கமான நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வரவேண்டியவராகியிருக்கின்றார்.

இது விடயத்தில் பங்காளிக் கட்சிகளின் பிடிவாதம் உறுதியாகவுள்ளமையைக் கண்ட கோட்டா தரப்பு குழம்பிப்போய் விட்டதாகத் தெரிகின்றது.

பங்காளிக் கட்சிகள் இன்று கொழும்பில் பொது மக்களைக் கூட்டி உண்மையை எடுத்துரைக்கத் தீர்மானித்த நிலையில், நேற்றுமுன்னிரவு அந்தப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை அழைத்துப் பேசியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

சந்திப்பின் முழு விவரமும் நேற்று முன்னிரவு வரை வெளியாகவில்லை.

எனினும், பங்காளிக் கட்சிகளினால் இன்று கொழும்பில் நடத்தத் திட்டமிடப் பட்ட பொது மக்கள் சந்திப்பு ஏற்பாடுகளின்படி நடைபெறும் என பங்காளிக் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் எதிர்ப்பு வலுப்பதால் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க வேண்டிய இக் கட்டு ராஜபக்ஷக்களுக்கு..!

– மின்னல் –

## பார்த்தியிடம் 5 மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் ஐந்து மணி நேரம் வரை விசாரணைகள் இடம்பெற்றன.

மாநகர கண்காணிப்பாளர்களின் சீருடை யாருடைய அனுமதியில் அறிமுகப்படுத்தப்பட்டது? யார் அறிமுகப்படுத்தினார்கள்? சீருடைக்கு ஏன் இந்த நிறம் தெரிவு செய்யப்பட்டு இருந்தது? போன்ற பல கேள்விகள் தன்னிடம் விசாரணையின்போது கேட்கப்பட்டன என்று பார்த்திபன் கூறினார். விசாரணைகள் முடிவுற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகர திண்மக்கழிவகற்றல் தொடர்பாக தண்டப்பணம் அறவிடும் அதிகாரங்கள் மாநகர சபைக்கு உள்ளதா? இது போக்குவரத்துப் பொலிஸாருக்கு உரியதுதானே? என்ற அடிப்படையிலும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

நல்லூருக்கு அண்மையாக உள்ள வீதியில் கழிவு ஒயில் ஊற்றப்பட்ட தகவலை யார் உங்களுக்கு வழங்கியது? ஊற்றப்பட்ட கழிவு ஒயில் தொடர்பாக மாநகர சபை பணியாளர்களை அங்கு அனுப்ப உத்தரவிட்டது யார்? என்றும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநகர சபைக்கு இல்லை என்றும், அதனைச் செய்வதற்கு யார் அனுமதித்தார்கள் போன்ற பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன.

யாழ்.மாநகர சபை அமர்விலேயே உத்தியோகபூர்வமாக ஒரு முடிவை எடுத்து தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு சீருடையை வழங்குவது என்றும், கொழும்பு மாநகர சபை ஒத்த சீருடையை எமது மாநகர சபை பணியாளர்களுக்கும் வழங்குவது என்றும் தீர்மானித்தோம்.

இது ஒருவர் எடுத்த முடிவு அல்ல; ஒட்டுமொத்தமாக கொழும்பு மாநகர சபை எடுத்த முடிவைத் தழுவி இந்த முடிவு எட்டப்பட்டது.

கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது தொடர்பாகவும், அதில் பொதுமக்கள் வழுக்கி விழுகின்றமை தொடர்பிலும், நல்லூர் பகுதியில் உள்ள கடை உரிமையாளர் ஒருவர் எனக்குத் தெரிவித்த நிலையிலே நாம் ஒரு தற்காலிக ஏற்பாடாக அதனைச் சீர்செய்ய எமது மாநகர பணியாளர்களை ஈடுபடுத்தினோம்.

மனிதாபிமான அடிப்படையிலேயே நாங்கள் இந்தப் பணியை செய்தோம். அதேவேளை, ஏனைய தரப்புகளின் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த வேலையை நாம் செய்யவில்லை.

நல்லூர் வீதியில் ஊற்றப்பட்ட கழிவு ஒயில் தொடர்பான விசாரணைகளில், கழிவு ஒயில் ஊற்றப்பட்ட விடயத்தை எனக்குத் தெரிவித்த கடை உரிமையாளரும் விசாரணைகளுக்காகத் தற்போது அழைக்கப்பட்டுள்ளார் என்று அறிந்தேன்.

மேலதிக விசாரணைகளுக்காகத் தேவைப்பட்டால் கொழும்புக்கு வரவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சீருடை விவகாரங்கள் விசாரணைகள் முடிந்துவிட்டன. ஆனால், உங்களுடைய முகப்புத்தகத்தில் போடப்பட்ட பதிவுகள் தொடர்பாக விசாரணைகள் சில வேலைகள் உங்கள் மீது இருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர் – என்றார்.

## ரெலோவின் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவை 6ஆம் திகதி அளவில் கூட்டவும், மேற்படி விடயத்தில் ரெலோ வழங்கியுள்ள அழைப்பை அந்தக் கூட்டத்தில் பரிசீலிக்கவும் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றிரவு தீர்மானித்தது.

அரசியல் குழுவின் கூட்டம் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் 'சூம்' முறையில் நடைபெற்றது.

பதில் பொதுச் செயலாளர் டாக்டர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர்கள் செல்வராசா மற்றும் சீ.வீ.கே. சிவஞானம், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., ஸ்ரீதரன் எம்.பி., முன்னாள் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் பங்குபற்றினர்.

கலையரசன் எம்.பியும், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

கூட்டத்தில் பங்குபற்றிய கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட எவரும், மேற்படி ரெலோவின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு ஆதரவாகக் கருத்து வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்று எடுக்கப்பட்ட முடிவு இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு மாறானதாக அர்த்தப்படுத்தப்படக்கூடாது எனவும் கூட்டத்தில் பங்குபற்றியோர் தெரிவித்தனர்.

## சர்வதேச குற்றவியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 1696 ஆவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கே எங்கே உறவுகள் எங்கே?, குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் உடன் நிறுத்து!, வேண்டும் நீதி வேண்டும், சர்வதேசமே பதில் சொல் என்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தங்கியவாறும் பங்கேற்றனர்.

## ஞானசார செயலணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூவரை நியமிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார். அந்த மூன்று உறுப்பினர்களின் பெயர்களை செயலணிக்கு அனுப்ப மேற்படி தமிழ் அரசியல் பிரமுகர்கள் கேட்கப்பட்டனர் எனவும் அறியமுடிந்தது.

ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் எனவும் தெரியவந்தது.

## மரணம் 22...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 30 வயதுக் குட்பட்டவர்களில் பெண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர் களில் 3 ஆண்களும், 3 பெண்களுமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட வர்களில் 6 ஆண்களும் 9 பெண்களுமாக 15 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 696 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று 540 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 38 ஆயிரத்து 860 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 ஆயிரத்து 487 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 863 ஆக அதிகரித்துள்ளது.



# டிசெம்பருக்குள் 5 விமான நிறுவனங்கள் இலங்கைக்கான சேவையை ஆரம்பிக்கும்!

டிசெம்பர் மாதத்துக்குள் ஐந்து விமான நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பிரான்ஸ், இத்தாலி மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் விமான சேவைகள் இந்த வருட இறுதிக்குள் இலங்கைக் கான சேவைகளைஆரம்பிக்கதிட்டமிடப்பட்டுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். அதன்படி சுவிஸ் ஓய்வு பயணவிமான நிறுவனம் நவம்பர் மாதம் முதல் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் நிறுவனமும் நவம்பரில் இலங்கைக்கான விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எயார் பிரான்ஸ் நவம்பரில் இருந்து இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பிக்கும் அதேவேளை, ரஷ்யா மற்றும் இத்தாலியில் இருந்து இயங்கும் இரண்டு விமானங்கள் டிசெம்பரில் இலங்கைக்கு விமான சேவையை ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேநேரம், பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் விளம்பரங்களை மேற்கொள்ளுமாறு இந்த வார ஆரம்பத்தில் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அத்தோடு, கஜகஸ்தான், உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் விளம் பரங்களை துரிதப்படுத்துமாறும் சுற்றுலா மேம்பாட்டு பணியகத்திற்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses (3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

## பருத்தித்துறை வைத்தியசாலையில் உயிரிழந்த பெண்ணுக்கு கொவிட்!

பருத்தித்துறையில் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திடீரென சுகவீனம் ஏற்பட்ட நிலையில் அவர் செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழுந்துள்ளார்.

அவரது சடலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதன்கிழமை சென்ற மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் 5 ஆயிரம் ரூபா லஞ்சம்பெற்ற 3 போக்குவரத்துப் பொலிஸார் பணி நீக்கம்!

மட்டக்களப்பில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது ஓட்டோ செலுத்திச் சென்றவரிடம் 5 ஆயிரம் ரூபா இலஞ்சமாக பெற்ற மட்டு தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவில் கடமையாற்றிவரும் 3 பேர் உடனடியாக தற்காலிகமாக கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என மட்டு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து செங்கலடி பிரதேசத்திற்கு முகத்துவாரம் வீதி ஊடாக ஓட்டோவில் சம்பவதினமான புதன்கிழமை மாலை சென்று கொண்டிருந்த போது சவுக்கடி பாலத்திற்கு அருகில் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போக்குவரத்து பொலிஸார் ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்ட நிலையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி ஓட்டோவைச் செலுத்திச் சென்றுள்ளமையைக் கண்டு பிடித்தனர்.


இதனையடுத்து ஓட்டோ சாரதியிடம் போக்குவரத்து பொலிஸார் சாரதி அனுமதிப்பத்திரமின்றி செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்போவதாகவும் அதனை செய்யாது அங்கிருந்து விடுவிக்க 10 ஆயிரம் ரூபா லஞ்சமாக கோரியுள்ளனர்.

இதனையடுத்து 5 ஆயிரம் ரூபாதான் இருக்கின்றது என்று கூற, 5 ஆயிரம் ரூபாவை போக்குவரத்துப் பொலிஸார் லஞ்சமாக பெற்ற பின்னர் அவரை விடுவித்ததையடுத்து ஓட்டோ சாரதி உடனடியாக மட்டு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு சென்று தன்னிடம் 5 ஆயிரம் ரூபா லஞ்சமாக போக்குவரத்துப் பொலிஸார் பெற்றுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தலில் உடனடியாகப் பொலிஸ் அத்தியட்சகர் குமார சிறி தலைமையில் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த போக்குவரத்து பிரிவில் கடமையாற்றிவந்த 3 பொலிஸாரையும் உடன் அமுலுக்குவரும் வகையில் புதன்கிழமை உடனடியாகக் கடமையில் இருந்து இடைநிறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




## இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவின் ஒத்துழைப்பிற்கு பிரதமர் பாராட்டு



இந்நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ.ஷென் ஹொன் முன்னிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பாராட்டைத் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சீனத் தூதுவர் சீ.ன்ஹொன் புதன்கிழமை அலரி மாளிகையில் சந்தித்தபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று நிலைமையை கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசாங்கத்துக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு வாழ்த்து தெரிவித்த சீன தூதுவர் சீ.ன்ஹொன், அதற்கு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சீன மக்கள் வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி இடையிலான 10 கோடி சீன யுவான் மதிப்பிலான இருதரப்பு நிதி பரிமாற்ற ஒப்பந்தம், உலகளாவிய முதலீட்டாளர்களின் உணர்வை வலுப்படுத்தவும், இலங்கையின் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் உதவும் என சீன தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 65 ஆண்டு நிறைவு மற்றும் இரப்பர் அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமை ஆகியவற்றைக் குறிக்கும் 2022ஆம் ஆண்டு, இலங்கை - சீன இருதரப்பு உறவின் மிக முக்கியமான ஆண்டாக விளங்கும் என சீனத் தூதுவர் சீ.ன்ஹொன் நபிக்கை தெரிவித்தார்.

அடுத்த மாதம் வரவிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சீன ஜனாதிபதி மற்றும் சீன பிரதமரின் சார்பில் சீனத் தூதுவர் முன்கூட்டிய பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வதேச குற்றவியல் வழக்குகள்

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலிஸைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எதிராக இரு நூறு ஈழத் தமிழர்களால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் வழக்குத் தொடுநரிடம் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சூழலியல் மாற்றம் தொடர்பான ஐ.நாவின் சர்வதேச மாநாடு ஸ்கொட்லாண்டின் கிளாஸ்கோ நகரில் நடைபெறுகின்றமையை ஒட்டி, அடுத்த வாரத்தில் அங்கு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செல்லவிருக்கையில் இந்த வழக்குத் தாக்கல் பற்றிய செய்தி வெளியாகியிருக்கின்றது.

இப்போது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் கோட்டாபயவையும் ஏனைய அதிகாரிகளையும் கைது செய்யும்படி கோரப்பட்டிருப்பதால், ஏதோ கிளாஸ்கோ நகருக்கு அவர் வரும்போது அவர் கைது செய்யப்படுவாரா என்ற மாதிரி எல்லாம் பேச்சுப்படுகின்றது. அப்படி ஒன்றும் நடக்காது. அது மட்டுமல்ல, இப்படி இருநூறு பேரின் வழக்குகளைத் தாக்கல் செய்தமையின் பின்னணியில் உள்ள பயன்பற்றியும் பல தரப்புகளும் வெளிப்படையாகவே ஏளனமும் சந்தேகமும் தெரிவிக்கின்றமை கவனிக்கப்பட வேண்டும்.

இத்தகைய வழக்குகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஏற்றுப் பரிசீலிப்பதாயின் முதலில் அந்த நீதிமன்றுக்கு அப்படி விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் உண்டா என்ற வினா எழுப்பப்படும்.

ஒன்றில், ரோம் உடன்பாட்டில் ஒப்பமிட்ட நாடாக இலங்கை இருக்குமானால் அந்த உடன்பாட்டின் அடிப்படையில் அதன் அங்கத்துவ நாடு ஒன்று மீதான விசாரணைக்கான நியாயாதிக்கம் அந்த நீதிமன்றுக்கு வந்துவிடும். ஆனால் இலங்கை அந்த ரோம் உடன்பாட்டில் ஒப்பமிடவில்லை.

அல்லது, சம்பந்தப்பட்ட நாடு முறைப்பாடு செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட விடயம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிப்பதற்கு தானாக இணங்கி எழுத்தில் இணக்கம் தெரிவிக்க வேண்டும். இலங்கை அத்தகைய அனுமதியைத் தரவில்லை; இனியும் தராது. ஆகவே அந்த வழிமுறையும் சரிவராது.

மூன்றாவதாக – அத்தகைய விடயங்களை விசாரிக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபை பரிந்துரை வழங்க வேண்டும். ஆனால் இலங்கை விடயத்தில் சீனா, ரஷ்யா போன்றவை எப்போது இலங்கைக்கு ஆதரவாகத் தமது வீட்டோ அதிகாரத்தை பாதுகாப்புச் சபையில் பிரயோகிக்கத் தயாராக இருப்பதால் இலங்கைக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான தீர்மானம் எதுவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படுவதற்கும் வாய்ப்பேயில்லை.

ஆகையினால், இந்த இருநூறு பேரின் வழக்குகளை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பதற்கான வாய்ப்பு அடியோடு குறைவு எனலாம்.

எனினும் அந்த நீதிமன்றத்தின் வழக்குத் தொடுநர் தமக்கு அளிக்கப்பட்ட வழக்குகளில் – சமர்ப்பணங்களில் – கூறப்பட்டுள்ள அத்துமீறல்கள் குறித்துத் தனது சொந்தப் புலனாய்வுகளை நடத்தி, ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு ஏதேனும் பரிந்துரையை அவ்வப்போது வழங்கலாம். அவ்வளவே.

இதற்கு அப்பாலும் சில விடயங்களை தென்னிலங்கையைச் சார்ந்த மேற்குலகவாசிகள் கூறுகின்றனர்.

இந்த வழக்குகளைத் தொடர்ந்த ஈழத்தமிழர்கள் பலரும், பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் கோரியவர்கள், அவர்களின் அரசியல் தஞ்சக் கோரிக்கைகள் மறுக்கப்பட்ட நிலையில் இப்படி வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் தங்கள் வழக்குகள் நிலுவையில் இருப்பதால், அவற்றின் முடிவு வரும் வரை தங்களை நாடு கடத்தக் கூடாது என்று குறிப்பிட்டு, தமது நாடு கடத்தல்களை அவர்கள் தாமதிக்கப் பண்ணலாம் என்று சில மேற்குலக வட்டாரங்கள் வியாக்கியானங்கள் கூறுகின்றன.

சரியோ, பிழையோ இப்படி வெளிப்படையாக இலங்கைக்கு எதிரான பரபரப்பு நடவடிக்கைகளை சர்வதேச மட்டத்தில் முன்னெடுப்பது, பாதிப்புற்ற தமிழர்களுக்கு சர்வதேசம் இன்னும் நீதி வழங்கவில்லை என்பதை முரசறைந்து கொண்டிருக்கும் என்பது மட்டும் திண்ணம்.

# ஜனாதிபதியின் செயலணி கேலிக்கூத்தான ஒன்றே!

## ரஞ்சித் மத்தும பண்டார கிண்டல்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மற்றுமொரு ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டுள்ளது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்காக அவர் நியமித்த செயலணி கேலிக்கூத்தான ஒரு செயலணி என்றே சொல்ல வேண்டும். இந்த செயலணியின் தலைவராக சங்கைக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை ஆணைக்குழுவின் நோக்கங்களை கேலிக்கூத்தாக்கும் செயலாகும். எந்தவொரு குடிமகனும் இனம், மதம், சாதி அல்லது பிற காரணிகளின் அடிப்படையில் சட்டத்தில் எந்த மாற்றத்துக்கும் உட்படுத்தப்படக் கூடாது என்று ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட நடைமுறைக் கோவை கூறுகிறது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார. இது தொடர்பில் அவரது ஊடக அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -


கடந்த காலங்களில் சங்கைக்குரிய கலகொட அத்தே தேரர் எவ்வாறு செயற்பட்டார் என்பதை இந்நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. முஸ்லிம்களைக் குறிவைத்து அவர் வெளியிட்ட அறிக்கைகளையும் செயற்பாடுகளையும் வைத்து நாட்டில் ஏற்படுத்திய நிலையை தர்கா நகரின் நிகழ்விலயே தெரிந்தது. சட்ட மாற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட கலகொட அத்தே தேரர், திருமதி சந்தியா எக்னலிகொடவிற்கு நீதிமன்றத்துக்குள் கூறிய கருத்துக்கு, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறைவாச தன்டனைக்குட்பட்டு ஜனாதிபதி மன்னிப்பளிக்கப்பட்ட நபராவார்.

சட்டத்தின் ஆட்சியை அமுல்படுத்துவதற்கும் சட்டத்தின் பாதுகாப்பு நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் நியமிக்கப்பட்ட செயலணிக்கு சங்கைக்குரிய கலகொட அத்தே ஞானசார தேரரை நியமித்திருக்கின்றமை நாட்டின் அதியுயர் சட்டமான அரசமைப்பை அவமதிக்கும் செயலாகும்.

இந்த ஆணைக்குழுவின் நியமனத்தின் இரண்டாவது நகைச்சுவை என்னவென்றால், ஜனாதிபதி தனது பதவிக்காலம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்து செல்லும் போது நடவடிக்கை எடுத்ததாகும். ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் முதல் வாக்குறுதியாக இருந்தது ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதே. இருபதாம் திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்தில் நுழைய அனுமதித்தது, தான் விரும்பும் நபர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறுகின்றமை, பாதிக்கப்பட்டவர்களைப் புறக்கணிக்கும் மோசமான அரசியல் பழிவாங்கல்களை ஆராய்வதற்காகவே என்று நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஊடாக நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டனைகளை மாற்ற நடவடிக்கை எடுப்பது, அந்த ஆணைக் குழுவின் ஊடாக விசாரணை அதிகாரிகளைக் குற்றவாளியாக் கும் முயற்சியில், சட்டத்தின் ஆட்சியையே கேலிக்கூத்தாக்கிய, சட்டத்தின் ஆட்சிக்கே சவாலாக விளங்கிய ஆட்சியாளர்கள், இப்போது தான் விழித்துக் கொண்டமை போல, இந்த செயணியை ஸ்தாபித்தமை நாட்டையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

இவ்வாறானதொரு செயலணிக்கு நாட்டின் இரண்டாவது பெரிய சனத்தொகையான தமிழ் மக்கள் மற்றும் பெண்களின் பிரதிநித்துவம் இல்லாமை என்பது பாரிய பிரச்சினையாகும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அரசாங்கம் வெட்கமில்லாமல் இருந்து வருகின்றது என்பது மீண்டும் மீண்டும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.- என்றுள்ளது.

## காத்தான்குடியில் விபத்து; ஒருவர் பரிதாபகரமாக பலி!



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குற்பட்ட காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று (வியாழக்கிழமை) நள்ளிரவு இடம் பெற்ற வாகன விபத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று முன்னே சென்ற மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்களில் காத்தான்குடி மெத்தை பள்ளிவாயல் வீதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஏ.அம்ஹர் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மற்றய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரை செலுத்தி வந்தவர் பத்தரமுல்லையல சேர்ந்த ஒரு வைத்தியர் எனவும் இவர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலை ஒன்றில் வைத்தியராகக் கடமையாற்றுபவர் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜ.பி. விராத் தென்னகோன் தலைமையிலான பொலிஸார் ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டமையுடன் காரின் சாரதியான வைத்தியரை கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடி பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## புவிசார் அரசியலில் எமது நாடு இலங்கையை விளையாட்டுக் களமாக மாற்ற இடமளியோம்!

### சஜித் ஆவேசக் கருத்து

புவிசார் அரசியலில் இலங்கையை விளையாட்டுக் களமாக மாற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எவருக்கும் இடமளிக்காது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

காசல் வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்களை வழங்கி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

சீன உரம் கொண்ட கப்பல் எவ்வாறு இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவியது என்பது எமக்கு ஆச்சரியமாக உள்ளது.

அது எவ்வாறு சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் பிரவேசித்தது? எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட எவரையும் ஐக்கிய மக்கள் சக்தி அனுமதிக்காது. இலங்கையை நாடகமாட எவரையும் அனுமதிக்க மாட்டோம்' என அவர் மேலும் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# திருமலையில் இனித் தமிழருக்கு எம்.பி. பதவியே இல்லை என்பதைத்தான் சம்பந்தன் விட்டுப் போகப் போகின்றாரா?

## தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் சார்பில் அவருக்குப் பகிரங்கக் கடிதம்

**திருகோணமலை,ஒக்ரோபர்29**

**திருகோணமலை புத்திஜீவிகள், தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் என்ற பெயரில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு 'தமிழரசுக் கட்சியின் மீதான நம்பிக்கையும் திருகோணமலை மக்களின் அவநம்பிக்கையும்' என்ற பெயரில் நேற்று ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. நகரப் பிரமுகர்கள் பலர் அதில் ஒப்பமிட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**



இதன் பிரதிகள் தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் சத்தியலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் நிலங்கள் பறிபோதல் உட்பட 15 விடயங்கள் விவரமாக இந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்ட பட்டியல் ஒன்றில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:–

எழுபதாண்டு அரசியல், ஆயுத போராட்டத்தின் பின்பும் ஏதிலிகளாக்கப்பட்ட இனம் ஈழத் தமிழினமே ஆகும். ஆயுதக் கலாசாரம் ஓய்ந்தால் அரசியல் தீர்வைப்பெற்றிடலாம் எனும் பசப்பு வார்த்தையும் பொய்யாகி ஆண்டுகள் ஆறிரெண்டாகிவிட்டன. 2009 இற்குப் பின்னான காலத்தில் ஆற்றுப்படுத்தல், அபிவிருத்தி எனப் பேசிய போதும், நினைவுத் தூபிகளில் கண்ணீர் விடுபவர்களும் கைது செய்யப்படும் அவலமே இன்றும் அரங்கேறி வருகின்றது.

எதுவாகினும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையை வென்று தரும் அமைப்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பை இமயமாக நம்பிய தமிழர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இயலாமை வெள்ளிடைமலையாகத் தெரிகிறது. ஆயிரம் கதைபேசியும் ஆனது ஒன்றுமில்லை, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாதியாசனத்தை இழந்த கட்சிக்கு அதனால் பட்டசூடு கட்சியின் தலைமைகளுக்கு சுடவில்லை என்பது தமிழ்த் தேசிய அரசியலின் சாபக்கேடு.

தமிழ்த் தேசிய சிந்தனையற்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்கள் விட்ட தவறைச் சுட்டிக்காட்டும் அளவுக்கு, சிங்கள அரசு செய்த கொடுமைகளையும், குற்றங்களையும் தட்டிக் கேட்கத் தவறுகின்றனர். சட்டத்தின் பால் தாம் சொல்வதே சரியென வகுப்பெடுத்து, தமிழ்த் தேசியத்தையும், ஒப்பற்ற உயிர்த் தியாகத்தையும் உள்ளங்கையில் அடைக்க விழைகின்றனர். அவர்கள் செப்பனிட்ட பாதையிலேயே பயணிக்க விரும்புகின்றார்களே அன்றி, இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பாதையைத் தேடுபவர்களாக இல்லை. பதவிக்காலத்தை கடத்த பல கட்டுக்கதைகள் விட்டுக் கொண்டிருக்கின்றனர், தமிழ் மக்கள் முன்னால் உள்ள வினைகளை அறுக்க எந்த உபாயத்தையும் மேற்கொள்ளவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தானைத் தலைவனற்ற சேனையாக தமிழ் இனம் தவிக்கிறது. அன்று தந்தை செல்வா அமிர்தலிங்கம் அடையாளம் காட்டி, தன் கண்முன்னே அவர் செயலையும் கண்டார், நாடாளுமன்றப் பதிவியில் இருந்து விலகி கட்சித் தொண்டனாக இறப்புவரை இயங்கினார். இன்றளவும் அவர் போற்றப்படுவதற்கும் ஏற்றப்படுவதற்கும் இதுவே காரணம்.

இவ்வழி வந்த கட்சியின் தலைமை இன்று பதவியை இறுகப் பற்றிக் கொண்டிருக்கின்றது, இயலாமை உச்சத்தில் இருந்தும், இயக்கம் இம்மியளவும் இல்லாத காலத்திலும் செல்லாத நாடாளுமன்றம் பெருஞ்செல்வமாகத் தெரிகின்றது ஐயா சம்பந்தன் அவர்களுக்கு.

தலைவன் எவ்வழி மக்கள் அவ்வழி" எனும் கூற்றின் எதிர்மறைப் பண்புக்கு அமைய தமிழர்கள் தலைவர்களால் வழி நடத் தப்படும் அவலமே இங்கு அரங் கேறிக் கொண்டிருக்கின்றது.

இது ஒரு புறமிருக்க, திருகோணமலையில் தமிழர் அரசியலால் ஒற்றைப் புல்லையேனும் பிடுங்கிப்போட முடியவில்லை. கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் தமிழர் தாயகம் எங்கும் தோற்கடிக்கப்பட்டநிலையில், தோற்கடிக்கப்படும் காரணத்துக்குப் பொறுப்பான தங்களை – தலைவர் சம்பந்தன் அவர்களை – திருகோணமலை மக்கள் வெற்றிபெறச் செய்தார்கள்.

இவ்வாறு, இரா. சம்பந்தன் எனும் பெருமையைப் பெற்றுத் தந்த திருகோணமலை மக்களுக்கு சம்பந்தன் ஐயா எவ்வாறு செஞ்சோற்றுக் கடன் கழிக்கப் போகின்றார்? தேர்தல் காலத்தில் பேசியதற்கிணங்க திருகோணமலைக்கு எப்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தரப் போகின்றார்? அவர் காற்றில் விட்ட வாக்குறுதிகளில் இதுவும் சேர்கிறதா?

தனது இறுதித் தேர்தல் வரை வெற்றியைத் தந்து நாடாளுமன்ற உறுப்பினராக சம்பந்தனை ஆக்கிய திருகோணமலை மக்களுக்கு, இனி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை எனும் ஒரு பரிசை தந்துவிட்டா சம்பந்தர் செல்லப்போகிறார்?

இது திருகோணமலை வரலாற்றிலும், சம்பந்தர் அவர்களது அரசியல் வரலாறிலும் கரும்புள்ளிகளாகப் பதிவாகப் போகிறது என்பதை ஐயா எப்போது புரிந்து கொள்வார்? தமிழரசுக் கட்சியின் பதாதைகளிலும், விளம்பரங்களிலும் தொடர்ந்து தந்தை செல்வநாயகத்தின் படம் மட்டும்தான் இடம் பிடிக்கப் போகின்றதா? எதிர்காலத்தில் எந்தவொரு அடையாளத்தையும் சம்பந்தர் ஐயா விட்டுப் போகவில்லையா? இதற்கு சம்பந்தன் ஐயாவே பதில் சொல்ல வேண்டும். இது தனியொருவனது கேள்வியல்ல.

தமிழ்த் தேசியத்தையும், தமிழரசுக் கட்சியையையும் நேசிக்கும் ஒவ்வொரு குடிமகனும் கேட்கும் கேள்வியாகும் – இக் கேள்விகளுக்கான பதில் என்பதை விட ஆக்கபூர்வமான அடைவை எதிர்பார்த்தவர்களாக!

சம காலத்தில், திருகோணமலையில் தீர்க்கவேண்டிய, நாடாளு மன்ற உறுப்பினரால் சீர் செய்யக்கூடி சில பிரச்சினைகளை மட்டும் கொண்ட பட்டியல் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இது தனிமனிதர்களின் மனதைப் புண்படுத்துவற்கானது அல்ல. ஓர் இனத்தின் விடிவிற்கானது. – என்று உள்ளது.

# ஜனாதிபதி, பிரதமர் எள் என்றால் நான் எண்ணெய் ஆக இருப்பேன்!

## தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தார் டக்ளஸ்



ஜனாதிபதியும், பிரதமரும் எள் என்றால் நான் எண்ணெயாக இருந்து அம்பாறை மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் என கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நீண்டகாலமாக இழுபறியில் இருந்து வரும் ஒலுவில் துறைமுக விவகாரம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஒலுவில்துறைமுகவளாகத்தை பார்வையிட்டதுடன், துறைமுக குளிர்சாதன வசதிகள் மேம்பாடு, மீன் சந்தைப்படுத்தல் வசதிகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

ஜனாதிபதி, பிரதமர் எள்ளென்றால் நான் எண்ணெயாக இருந்து அம்பாறை மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன். கடந்த காலங்களில் இருந்த அரசின் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளை என்னால் முடிந்தவரை நிறைவேற்றத் தயாராக உள்ளேன். இந்த ஒலுவில் துறைமுக விவகாரம் தொடர்பில் தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா எம்.பியும் கரிசனை கொண்டு என்னிடமும், ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்தவுடனும் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

மீனவர்கள் இன்று என்னை சந்தித்து முன்வைத்த பிரச்சினைகளை நான் கூடிய விரைவில் தீர்த்து வைக்கத் தயாராக உள்ளேன். யாருக்கும் பயப்படத் தேவையில்லை. மீனவர்களுக்குத் தேவையாக உள்ள ஒலுவில் துறைமுகம் யாருக்கும் பாதில்லாத வகையில் பிரச்சினைகள் முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்படும். – என்றார்.

இந்நிகழ்வில் அட்டாளைசேனை பிரதேச செயலாளர், கடற்தொழில் திணைக்களமாவட்ட உதவிப்பணிப்பாளர் நடராஜா ஶ்ரீரஞ்சன், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ். உது மாலெப்பை, தேசிய காங்கிரஸின் தேசிய கொள்கைபரப்பு இணைப்பாளர் யூ.எல். என். ஹுதா, கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், இலங்கை கடற்படை அதிகாரிகள், கடற்தொழில் திணைக்கள உயரதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மீன்பிடி அமைப்புக்கள், மீன்பிடி சம்மேளனம், மீன்பிடி சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் முக்கியஸ்தர்கள், மீனவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 175

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**436. இரண்டாவது அமர்வு பிரேமனில் (Bremen) ஏன் நடந்தது? அப்படியானால் அயர்லாந்தில் தரப்பட்ட தீர்வுகள் என்ன?**



மாவுங் ஷார்னி

இது தமிழ் மக்களின் புலம்பெயர் அரசியல் அமைப்புக்களால் முன் தள்ளப்பட்டவை.

அயர்லாந்து தீர்ப்பாயத்தின் முன் சமர்ப்பணம் வைத்து விசாரணை கோரிய இரண்டு அமைப்புக்களும் மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட பல சர்வதேச அமைப்புக்களுடன் கலந்து முன்வைத்த பிரச்சினைகள் இரண்டு. அவை ஆழமாகப் பதியப்பட்டிருந்தன.

முதலாவது - போரின் கடைசிக் கட்டங்களில் போர்க் குற்றங்களும் மனித குலத்துக்கெதிரான அட்டூழியங்களும் நடத்தப்பட்டிருந்தன.

அடுத்து – போர்நிறுத்தத்தின் சரிவுக்குக் காரணமானவை ,அவற்றின் பின்னணி எவை என்பது.

இந்த சர்வதேச அமைப்புக்கள் இனப் பிரச்சினையின் தாக்கங்களைத் தமிழ் மக்களின் மனித உரிமை மீறல்களாகவும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும், யுத்த நிறுத்தத்தை மீற எந்தச் சக்திகள் முன்னின்றன எனவும் ஆராய



செவானி காரிபியன்

விளைந்தன.

இந்த அமைப்புக்களெல்லாம், இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றை மேற்கொள்வது பிரயோசனமற்றது என்று பலகாலமாகப் புத்திமதிகள் தந்து ,நோர்வே முன்னெடுத்துச் சென்ற சமாதான பேச்சுக்களில் அதிக நம்பிக்கைகள் வைத்திருந்தவௌ. இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் கூட அப்படியான இராணுவ வெற்றி ஒன்று இனப்பிரச்சினையைத் தீர்த்து விடாது என வெளிப்படையாகப் போரின் தொடக்க நாள்களிலேயே தெரிவித்து இருந்தார். இந்த அமைப்புக்களின் பிரதான நோக்கம் இவை கண்டறியப்பட்டு, ஓர் உண்மைத் தன்மையில், நியாயமான, இணக்கமான தீர்வுக்கு தமிழ் மக்களையும் ஸ்ரீலங்கா அரசையும் நிர்ப்பந்திப்பதுதான். ஆனால் தீர்ப்பாயத்தில் சாட்சியமளித்த தமிழ் மக்கள், அவர்களை ஒழுங்கு படுத்திய புலம்பெயர் அமைப்புக்களால் தரப்பட்ட அறிக்கைகள், தமிழ்மக்களுக்கு நடந்தது இனப் படுகொலை எனவும் ஆகவே அந்த விசாரணைகள் அதனை இனப்படுகொலை என்று தீர்ப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டனர்.

அந்த நிலைப்பாட்டை எடுத்து முன் வழிப்படுத்தியவர்கள் தமிழ்நெற் (Tamil Net) குழுமத்துடன் இயங்கிய ராஜிவ் சிறீதரன், இனப்படுகொலைக்கெதிரான தமிழர்கள் ( Tamil Against Genocide) என்ற அமைப்புகள் (இதன் பெயரில்



ஹாலுக் கேர்கர்

ஒன்று அமெரிக்காவிலும் மற்றது லண்டனிலும் இருந்தன). ஐரோப்பாவில் இருந்தவையின் முக்கியஸ்தராக ஜனனி ஜனநாயகம் பணியாற்றினார். அடுத்து தென் ஆசியாவின் அக்கறை கொண்ட குடிமக்கள் ( Concerned Citizens Forum of South Asia) அமைப்பு. அதன் பொறுப்பாளராக ம்ஷ.போல் நியூமன் இருந்தார். இவர்கள் இயங்கிய தளங்களைப் புரிந்து கொள்ளலாம் என்பதால் ஈடுபட்டிருந்த பலரின் விவரங்களுக்குச் செல்லவில்லை. அவர்கள் தமிழ் மக்களிடையேயிருந்து பல சாட்சியங்களை நெறிப்படுத்தவும், அறிக்கைகள் சமர்ப்பணம் செய்யவும் பல பணிகள் செய்தனர்.

ஜனவரி 2010 இல் அயர்லாந்தில் நிறைவு பெற்ற அமர்வுகளின் பின் தீர்ப்பாயம் போர் மற்றும் மனித குலத்துக்கெதிரான குற்றங்களும் ஸ்ரீலங்கா அரசனால் நடத்தப்பட்டன எனவும் அந்தத் தீர்ப்பைத் தரும் அந்த நாள்வரை அவை தொடர்கின்றன எனவும் தெரிவித்தது.

மேலும் தீர்ப்பாயம் தனது தீர்ப்பில் - இனப்படுகொலை குற்றம் ஆராயப்பட வேண்டும் என்ற சமர்ப்பணம், தீர்ப்பாயத்துக்கு முன் வைக்கப்படாமலிருந்தாலும் எமக்கு முன் தோன்றிய சில அமைப்புக்களும் சாட்சியமளித்த சிலரும் இனப்படுகொலை தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினர். இனப்படுகொலை நடந்ததற்கான போதுமான சான்றுகள் தீர்ப்பாயத்தின் முன் சமர்ப்பிக்கப்படாதமை



மான்பிறட் ஹிஞ்

யால் போர்க்குற்றங்களையும் மனித குலத்துக்கெதிரான குற்றங்களையும் இணைத்து விசாரிக்க முடியவில்லை. - என்று குறிப்பிடப்பட்டது.

ஆகவே தீர்ப்பாயத்தினர் தங்களுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட சில சம்பவங்கள் இனப்படுகொலைக்கு ஆதாரமாகலாம் என மேற்கொண்டு சாட்சிய ஆராய்வுகள் நடத்தப்பட வேண்டும் என பரிந்துரைத்தனர். அவை பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் - முக்கியமாக தமிழ் மக்களின் புத்திஜீவிகள், அவர்கள் தடுப்பு முகாம்களில் அனுபவிப்பவை, தமிழ் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரமும் இருப்பும் அவர்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக ஏற்பட்ட தடைகளும் போன்றவை என தீர்ப்பாயத்தால் சுட்டிக் காட்டப் பட்டன.

அதனை அடுத்து சாட்சியங்களுக்காக தீர்ப்பாயத்தினால் தமிழ் மக்களது புலம்பெயர் அமைப்புக்களோடும், தன்னிச்சையாகவும், மேலும் அரசாங்கள், அவற்றின் அமைப்புக்கள், இராணுவங்களிடையே பகிரப்பட்ட தகவல்கள் என பல சேகரிக்கப்பட்டன. தமிழ் மக்கள் சுதந்திரம் பெற்ற காலங்களிலிருந்து அனுபவித்த அட்டூழியங்கள், அடக்குமுறைகள் என்பவை பற்றிய சாட்சியங்கள் நான் குறிப்பிட்ட



ஹெலன் ஜார்விஸ்

தமிழ் புலம்பெயர் அமைப்புகளால் சேகரிக்கப்பட்டன. அது மூன்று வருடம் சென்றது. அதன்பின் அந்த இரு அமைப்புக்களும் இரண்டாம் தடவையும் தீர்ப்பாயத்தை அணுகி நடத்தப்பட்ட இனப்படுகொலையையும் அது நடத்தப்படுவதற்கு அனுசரணையாக இருந்த சூத்திரதாரி நாடுகளையும் கண்டறியுமாறு கேட்டார்கள். அதற்காகவே ஜேர்மனியில் பிரேமன் நகரில் இரண்டாவது அமர்வு நடந்தது.

ஜேர்மனி போருக்கு ஆதரவு தராது, சமாதானத் தீர்வையே வற்புறுத்தியதாலும், விடயத்தை முன்னெடுத்த ஓர் அமைப்பு அங்கீகரித்ததாலும் அது தேர்ந்தெடுக்கப்பட்டது.


**437. அந்த அமர்வுக்கு தீர்ப்பாயத்தின் நடுவர்களாக யார் நியமிக்கப்ட்டார்கள்?**

இந்த அமர்வுகள் முக்கியமாக இனப்



சேவியர் ஜிரால்டோ மொரேனோ

படுகொலை நடந்ததா என்பதை ஆராயும் நோக்கம் கொண்டமையால் அதிக நடுவர்கள் அதனை ஒட்டிய பின்னணியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். முதல் தீர்ப்பாயிலிருந்த டெனிஸ் ஹலிடே



டெல்லா காபிரியல் மோற்றே

(Denis Halliday), ஜியானி ரோகோனி (Gianni Togononi ), டானியல் பியேற்ஸ்ரெயின் (Danial Fierstern ), ஒயஸ்டின் திவேதார் (Oyastein Tveter) என்பவர்களோடு பின்வருவோர் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

(07ஆம் பக்கம் பார்க்க)



போல் நியூமன்

# பஸிலின் அலாவுதீன் விளக்கு வேலை செய்தால் அடுத்த மாதம் பொருள்களின் விலை குறையும்

## பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார் மனோ



பஸிலின் அலாவுதீன் விளக்கு வேலை செய்தால் அடுத்த மாதம் பொருள்களின் விலைகள் குறையும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத்துக்கு இன்னும் 2 நாள்கள் தானே உள்ளன, பொறுத்திருந்து பார்ப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். இதன்போது மேலும் கூறுகையில் -

எப்படி அடுத்த மாதம் திடீரென விலைகள் குறையும்? குறைந்தால் நல்லம். பஸில் ராஜபக்ஷ, வரும் போது அலாவுதீனின் விளக்கை கொண்டு வந்ததாகக் கூறினார். அந்த விளக்கு எரியாமல் உள்ளது. அதுதான் பிரச்சினை. அவருடைய அந்த விளக்கு உடைந்து விட்டது.

இல்லையென்றால் அந்த விளக்குக்கு ஏதாவது நடந்துவிட்டது. அது வேலை செய்தால் அடுத்த மாதம் பொருள்களின் விலைகள் குறையும். நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். அடுத்த மாதத்துக்கு இன்னும் 2 நாள்கள் தானே உள்ளன. ஆகவே பொறுத்திருந்து பார்ப்போம்.

அமைச்சர்கள் ஊடகங்கள் முன் வந்து பொருள்களின் விலை கூடிவிட்டது தானே? எமக்கு தெரியும் எமக்கும் கவலை தான்! என்று கூறி பயன் இல்லை. நீங்கள் தான் அரசாங்கம். நாங்கள் இல்லை. நாங்கள் எதிர்க்கட்சி.

உங்களுக்கு தான் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கான பொறுப்பை நீங்கள் தான் செய்ய வேண்டும். அதை செய்யாமல் ஊடகங்கள் முன் வந்து பொருள்களின் விலைகள் கூடிவிட்டது தானே? மக்களுக்கு பிரச்சினை தானே? என்று கூறி எந்த பிரயோசனமும் இல்லை. அப் படி பேச வேண்டாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இன்னமும் 15 ஆண்டுகளுக்கு அரசை வீழ்த்த முடியாதாம்!

## துமிந்த சில்வா சூளுரை

கொழும்பு, ஒக். 29

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தை இன்னும் 15 ஆண்டுகளுக்கு வீழ்த்தி விட முடியாது எனத் தான் பொறுப்புடன் கூறுகின்றார் எனத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் பசளை பிரச்சினை இருக்கின்றது. ஆசிரியர்களின் பிரச்சினை இருக்கின்றது.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான பிரச்சினை இருக்கின்றது. இந்த ஒவ்வொரு பிரச்சினைகளால் அரசாங்கத்தை வீழ்த்த முயற்சிக்கின்றனர்.

இன்னும் 15 ஆண்டுகளுக்கு தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்பதை நான் பொறுப்புடன் கூறுகிறேன் என துமிந்த சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# குழப்பவாதிகளை வெளியேற்றாவிட்டால் அரசுக்குக் காத்திருக்கின்றது பேராபத்து

## சாகர காரியவசம் எச்சரிக்கை

அரசுக்குள் இருக்கும் குழப்பவாதிகளை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையேல் அரசுக்குத் தான் ஆபத்து என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த 24ஆம் திகதி இரவு நடைபெற்ற ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான காரணம் என்னவென்று ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதி தலைமையிலான ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சிலர் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மைதான். கூட்டத்துக்குச் சமுகமளிக்காதவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களைக் கூறியுள்ளனர். சில பங்காளிக் கட்சியினரின் காரணங்கள்




விசித்திரமாக உள்ளன. இது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

எனினும், அரசுக்குள் குழப்பவாதிகள் சிலர் இருக்கின்றனர். அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையேல் அரசுக்குத்தான் ஆபத்து. இதைக் கட்சியின் தலைமையிடம் ஏற்கனவே நான் கூறிவைத்துள்ளேன்.

எனவே, ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையும் இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும். - என்றார்.

# இனப் படுகொலையும் ..........

மாவுங் ஷார்னி (Maung Zarni)

இவர் பர்மாவின் ஜனநாயக விடிவுக்கான செயல்பாட்டாளர். பர்மாவை விடுதலை செய் (Free Burma) என்ற கூட்டமைப்பை 1995 ல் தோற்றுவித்தவர். ரோகிங்கிய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை எதுவித நிபந்தனைகளும் இன்றி கண்டித்தமையோடு பிரதமராக இருந்த ஆங் சான் சுகியைப் பொதுத் தளங்களில் இவை தொடர்பில் கண்டித்தவர்.

செவானிகாரிபியன் (Sevane Garibian)

இனப்படுகொலையிலும் சர்வதேச சட்டங்களிலும் புலமை வாய்ந்தவர். ஜெனிவா, நியூசாடல் பல்கலைக்கழகங்களில் முறையே பேராசிரியராகவும் விரிவுரையாளராகவும் பதவியிலிருப்பவர். அவரது துறை, அரசாங்கம் நடத்தும் குற்றங்கள் பற்றியது.

ஹாலுக் கேர்கர் (Haluk Gerger)

மத்திய கிழக்கைப் பற்றிய மதிப்பு வாய்ந்த ஆய்வாளர். குர்திஷ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைப் போரின் ஆதரவுக்காக துருக்கி அரசாங்கத்தால் சிறை வைக்கப்பட்டவர்.

மான்பிறட் ஹிஞ் (Manfred Hinz)

பிரேமன் பல்கலைக்கழகத்தின் பொதுச் சட்டம், சமூகவியல், அரசியல் - சமூகவியல் என்ற துறைகளின் பேராசிரியர். நமிபியா, மேற்கு சகாரா போன்ற ஆபிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களோடு நீண்டகாலத் தொடர்புகளைப் பேணியவர். நமிபியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த போது யுனெஸ்கோ(UNESCO)வால் அங்கு எற்படுத்தப்பட்ட மனித உரிமை ஜனநாயகம் என்ற துறைகளில் தலைமைப் பதவியில் இருந்தவர்.

ஹெலன் ஜார்விஸ் (Helen Jarvis)

கம்போடியாவில் அமைக்கப்பட்ட அசாதாரண கம்போடிய நீதிமன்றங்களின் பொது விவகார அலுவலர்களின் தலைவராக அந்த நீதிமன்றங்கள் ஆக்கப்பட்ட நாள்களிலிருந்தே பணியாற்றியவர். ஐ.நாவால் கம்போடியாவில் கேமரூஜ் (Khemar Rouge) ஆயுததாரிகள் செய்த அட்டூழியங்களை விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டது இது.

யோசே இலாயஸ் எஸ்ராவே மோல்டோ ( Jose Elias Estevo molto)

சர்வதேச சட்டங்களின் வாலன்ஸியா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர். திபேத்தின் நிலைமை பற்றி பெரிதும் மதிக்கப்படும் சர்வதேச சட்டத்தரணி. புலமையாளர். திபேத்தில் நடத்தப்பெற்ற சர்வதேச குற்றங்கள் பற்றியதும் பர்மாவில் நடந்தவை பற்றியதும் பதியப்பட்ட சர்வதேச சட்ட விண்ணப்பங்களை வழித்தவர்.

சேவியர் ஜிரால்டோ மொறேனோ (Javier giraldo Moreno)

போகோட்டா நகரில் வதியும் கொலம்பியநாட்டின் இறையியலாளர் (Theologian). இனப்படுகொலையால் பாதிக்கப்படும் சமூகங்களை அவற்றின் பின்னணிகளில் அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய அறிவியலாளர். மக்கள் நிரந்தர தீர்ப்பாயத்தின் உதவித் தலைவர்.

டெல்லா காபிரியல் மோற்றே (Gabriele Della Morte)

இத்தாலியின் மிலான் சர்வகலாசாலையின் சர்வதேச சட்டத்துறையின் பேராசிரியர். ஜெனிவாவில் சர்வதேச மனித உரிமை மன்றின் சக உதவி பேராசிரியர். ரூவாண்டா படுகொலைகள் பற்றி விசாரித்த சர்வதேச குற்றமன்றின் (International Criminal Tribunal) சட்டத்தரணி. முன்னைய யூகோஸ்லேவியாவுக்கு ஏற்படுத்தப்பட்ட வழக்கு தொடர்ந்த அலுவலகத்தின் சட்ட லிகிதர் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அமைப்பின் ஆரம்ப ஆராய்வுகளுக்கான அரசாகத்தின் பிரதிநிதி (1998).

(வளரும்.......)

# தனங்கிளப்பில் விபத்து 6 பேர் படுகாயமடைவு!

யாழ்.சாவகச்சேரி - தனங் கிளப்பு பகுதியில் டிப்பர் வாகனமும் பட்டா ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்றது.



யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கி சென்று கொண்டிருந்த பட்டா ரக வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளாகியிருக்கின்றன.

சம்பவத்தில் 6 பேர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.

# புதையல் தோண்ட முற்பட்டவர்கள் 10 பேர் தம்பலகாமத்தில் கைது

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோயிலடி பகுதியில் புதையல் தோண்டும் நோக்குடன் பயணித்த பத்து பேரைக் கைது செய்துள்ளனர் எனத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தம்பலகாமம் பொலிஸார் கோயிலடி பகுதியில் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது ஓட்டோவில் பயணித்த மூவரை ஸ்கேனர் இயந்திரத்துடன் கைது செய்யப்பட்ட போது அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் மற்றைய நபர்களையும் கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

குறித்த சந்தேக நபர்கள் கந்தளாய் முள்ளிப்பொத்தானை குளியாப்பிட்டிய, குருநாகல் அம்பாந்தோட்டை பகுதிகளைச் சேர்ந்த 25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 10 பேரையும் தம்பலகாமம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றமையுடன், அவர்களை கந்தளாய் நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தம்பல காமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பங்களாதேஷில் இந்துக்கள் படுகொலையுண்டமை மட்டக்களப்பு இந்துக் குருமார் பேரவை அறிக்கை

கொழும்பு, ஒக். 29

பங்களாதேஷில் நவராத்திரி தினத்திலே இஸ்லாமிய பயங்கரவாதிகளால் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டு இந்து துறவி உட்பட இந்து மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து இந்து அமைப்புக்கள், இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பினால் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்கவுள்ளதாக மட்டக்களப்பு இந்து குருமார் பேரவையின் செயலாளர் சிவஸ்ரீ க. ஜெயச்சந்திரன் குருக்கள் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட இந்து குருமார் பேரவை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பங்களாதேஷில் நவராத்திரி தினத்திலே இஸ்லாமிய பயங்கரவாதிகளால் இந்து ஆலயங்கள், தாக்கப்பட்டு இந்துக்களின் வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு இந்து துறவி உட்பட அப்பாவி பொதுமக்கள் 11 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் திட்டமிட்டு இந்துக்களை அழிப்பதற்கான ஒரு செயற்பாடாகும்.

இந்து மக்கள் ஏனைய மதஸ்தலங்களை அழிப்பதோ அல்லது அந்த மதத்தின் மீது பொய்யான பிரசாரங்களை செய்வதோ இழிவுபடுத்துவதோ ஏனைய மதத்தினரை மூளைச்சலவை செய்து மதமாற்றத்தில் ஈடுபடும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் அல்லர். நானும் வாழ்ந்து இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பது இந்து மதத்தின் தர்மமாகும்.

இவ்வாறு பங்களாதேஷில் தொடர்ந்து இடம்பெறும் ஆயிரக்கணக்கான திட்டமிட்ட தாக்குதலில் பல ஆலயங்கள் சேதமடைந்ததமையுடன் பல பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

எனவே இந்த நவராத்திரி தினத்தில் இந்துக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு இந்து குருமார் பேரவை வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றது.

அதேவேளை, இந்தத் தாக்குதலைக் கண்டித்து இந்து ஆலயங்கள், இந்து அமைப்புக்கள், நிறுவனங்களின் கூட்டமைப்புஇன்று வெள்ளிக்கிழமை 29 திகதி, ஏற்பாடு செய்துள்ள ஆத்மசாந்தி வேண்டி மற்றும் கவனவீர்ப்பு போராட்டத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து குருமார் பேரவை பூரண ஆதரவு வழங்குவதாகவும், அன்றைய தினம் மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அகல் விளக்கு ஏற்றி ஆத்மசாந்தி வேண்டி இந்து மக்கள் பிரார்த்திக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இத்தாலியில் தேடப்பட்டு வந்த இலங்கை பெண் சடலமாக மீட்பு

இத்தாலியில் வசிக்கும் இலங்கைப் பெண் ஒருவர் தனது இரு குழந்தைகளையும் கொலை செய்த நிலையில், ஆற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார்.

அந்நாட்டு பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர். தனது இரு பிள்ளைகளையும் கொலை செய்த சம்பவம் தொடர்பில் குறித்த பெண் தேடப்பட்டு வந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், அடிஜ் என்ற ஆற்றில் இருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 34 வயதான சசித்ரா நிசன்சல பெர்னாண்டோ என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இத்தாலியின் வடக்கு வெனெற்றோ பிராந்தியத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11, 3 வயதுகளுடைய இரண்டு பெண் குழந்தைகளுமே கொல்லப்பட்டுள்ளனர்.

பிள்ளைகளின் சடலம் வீட்டின் படுக்கை அறையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சடலங்கள் கிடந்த அறையில் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் எதுவும் காணப்படவில்லை.

குழந்தைகளது சடலங்கள் மீட்கப்பட்ட பின்னர் தாயாரைத் தேடும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். பல மணி நேரங்கள் நீடித்த தேடுதலுக்குப் பிறகு அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணின் சடலம் அப்பகுதியில் உள்ள அடிஜ் என்ற ஆற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பாரிய செலவில் இந்தியாவிலிருந்து தரம் குறைந்த உரம் இறக்குமதி!

### திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

உரம் பற்றி இந்த அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு ஒன்றும் தெரியாது என ஆளும் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சேதன மற்றும் அசேதன உரம் பற்றி அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கு எவ்வித அறிவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய தரத்தில் உரத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் இயலுமை இருந்த போதிலும், அரசாங்கம் தரம் குறைந்த உரத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சந்திப்பில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஸ்லின்டெக் நிறுவனத்தின் ஊடாக தரமான உரத்தை இலங்கையில் உற்பத்தி செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக விவசாய அமைச்சரோ அல்லது அமைச்சு அதிகாரிகளோ எவ்வித கவனமும் செலுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய பொருள் செலவில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் தரம் குறைந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பம்

### கொரோனா பரவுவதாகவும் குற்றச்சாட்டு

நாட்டில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கை ஆரம்பித்த பல பாடசாலைகளில் கொரோனா தொற்று உருவாகியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

ஆரம்பப் பாடசாலை மாணவர்களில் பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்னும் 6 முதல் 13 வரையிலான வகுப்புகளுக்குக் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான பரிந்துரைகள் வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சில பாடசாலைகளில் அதிபர்கள், மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைக்கவுள்ளனர் என தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை அதிபர்கள், ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அரசாங்கம் ஒரு முறையின் கீழே 1 முதல் 5 வகுப்புகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது என்றும் குறித்த சில பாடசாலைகளில் கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்தில் சிக்கி 28 வயது இளைஞன் பலி

மோட்டார் சைக்கிள் ஒன்று, டிப்பர் ரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் புத்தளம் - மன்னார் வீதி, பஸ்பராபத் சந்தியில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான புத்தளம், வேப்படுமவ பிரதேசத்தை சேர்ந்த 28 வயது இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபருடன் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த 70 வயது வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் ரக வாகனத்தின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கசிப்பு கொண்டு சென்றவரை மடக்கிப் பிடித்த பொலிஸார்!

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் கசிப்பு கொண்டு சென்றவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் மடக்கிப் பிடித்த சம்பவம் கடந்த புதன்கிழமை பதிவாகியுள்ளது

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மீன் வியாபாரம் செய்வது போல் மீன் பெட்டியில் கசிப்பைப் பொலித்தீன் பைகளில் கட்டி வைத்து அதற்கு மேல் மீனை வைத்து இரகசிய மான முறையில் கசிப்பை எடுத்துச் சென்ற நபரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிக வருகையில் -

புதுக்குடியிருப்பு பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சூட்சுமமான முறையில் கசிப்பு கொண்டு வரப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசேட குழு ஒன்றை அனுப்பி வள்ளிபுனம் பகுதியில் வைத்து கசிப்பை எடுத்து வந்தவரை கைது செய்துள்ளார்.





மீன் வியாபாரம் செய்வது போல் மீன் பெட்டியில் கசிப்பை பொலித்தீன் பைகளில் கட்டி வைத்து அதற்கு மேல் மீனை வைத்து இரகசியமான முறையில் எடுத்து வரப்பட்ட 55 போத்தல் கசிப்புடன் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்ற புதுக்குடியிருப்பு பொலிஸார், நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## தமிழர்கள் பிரதிநிதித்துவம் இல்லை என்பதால் ஒரேநாடு ஒரே சட்டம் பயனற்ற ஒன்று அல்ல!

### சுரேன் ராகவன் எம்.பி. வக்காலத்து

தமிழர்கள் இடம்பெறவில்லை என்பதால் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கை வரைவை மேற்கொள்வதற்கான செயலணியில் நன்மைகள் இல்லையென கூறமுடியாது என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த செயலணி தொடர்பாக முழுமையாக தெரிந்துகொள்ளவேண்டியுள்ளது.

இதனையடுத்தே அது தொடர்பான கருத்தை வெளியிடமுடியும் என்றும் சுரேன் ராகவன் மேலும் தெரிவித்துள்ளார்.


உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## பெற்றோரை அனுதினமும் வணங்குவோம்!

### ஒரு சிறிய கதை



-தாமரைநாயகன் -

ராமு தனது படிக்கும் மேசையில் சைவ சமய பாடத்தை படித்துக் கொண்டிருந்தான். அம்மேசையில் ராமு பயன்படுத்தும் பென்சிலும் ரப்பரும் அருகருகே இருந்தன. அவை இருவரும் ஒருவரோடொருவர் கதைத்துக் கொண்டிருந்தமையை அவதானித்துக் கவனத்துடன் அந்த உரையாடலைச் செவிமடுத்தான்.

ரப்பரைப் பார்த்து பென்சில் சொன்னது.

ஒவ்வொரு முறையும் நான் செய்யும் தவறை, திருந்திக்கொள்ள என்னைச் சுத்தப்படுத்தி தூய்மையாக்கி விடுகின்றாய். ஆனால் என்னை தூய்மைப் படுத்தி நான் திருந்திக்கொள்ள என்னைச் சுத்தம் செய்யும் போது நீ கரைந்து கொண்டு போகின்றாயே. அது எனக்குப் பெரும் கவலையாக உள்ளது – என்றது.

ரப்பர் அதற்கு அது என் கடமை? நான் படைக்கப் பட்டதே அதற்காககத்தான். என்னைப் பார்த்து நீ வருத்தமடைய வேண்டாம். இதில் எனக்கு முழு மகிழ்ச்சி. முழுத் திருப்தியுடன்தான் நான் எனது கடமையைச் செய்கின்றேன் – என்று சிரித்தவண்ணம் பதிலளித்தது.

அது மேலும் உலகில் தவறு செய்யாதவர்கள் யாருமில்லர். தவறுகளைத் திருத்தி வாழ்பவர்கள் வாழ்வில்வெற்றிபெற்றவர் ஆகின்றனர். என்னால் உன் தவறுகள் நீக்கப்பட்டு நீ திருந்தி முன்னேறிச் சென்றால், அதுவே எனக்கு வெற்றி. நான் கரைந்து போவதையிட்டுக் கவலையில்லை என்று பெருமிதத்துடன் கூறியது.

இந்த உரையாடலைக் கேட்டதும் ராமுவுக்கு மின்னல் அடித்தது போன்று பல்வேறு யோசனைகள் மனதில் எழுந்தன.

அந்த ரப்பர் வேறு யாருமல்ல. எனது பெற்றோர்தான் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. அவர்கள் எனக்காகஎவ்வளவோசெய்கின்றார்கள். நான் விடும் சிறு சிறு தவறுகளைத் திருத்தி என்னை இந்த உலகில் உயர்வாக வாழ நல்வழிகளைத் தமது வாழ்நாள் முழுவதும் காட்டி, எனக்காக வாழ்ந்து கரைந்து போகின்றார்கள்.

அவர்களுக்கு என்றும் நன்றியுடையவனாக அவர்களை அனுதினமும் வணங்கித் துதிக்க வேண்டும் என்று முடிவு கொண்டான்.

அன்பார்ந்த பிள்ளைகளே, எமது தாயும் தந்தையரும் அனுதினமும் எமக்காகவே வாழ்கின்றார்கள். எமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்கின்றார்கள். தம்மை வருத்தி எம்மைஜ் கஷ்டப்படாது வாழ உதவுகின்றார்கள்; வழி காட்டுகின்றார்கள்.

அவர்கள் சொற்களைத் தட்டாது, தவறாது கேட்டு நடப்போம். அவை எமக்கு நன்மையே தருவன. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். இவ்வுலகில் எங்கள் மீது பொறாமைப்படாத,எங்கள் உயர்வில் மகிழ்ச்சி காணும் இரண்டு உள்ளங்கள் தாயும் தந்தையரும் ஆவர் என்பதையும் உணர்ந்து செயற்படுவோம். அனுதினமும் அவர்களைப் போற்றி, வணங்கித் துதிப்போம்.

## யோகா(சனம்) செய்வோம் வாருங்கள்!




யோகாசனத்தின் முதுகெலும்பாக அமைவது பயிற்சியாகும். இப்பயிற்சிகள்மூலம் அனைத்து உடல் உள்ளுறுப்புக்களும் நன்கு புடம்போடப்பட்டு வலிமை பெறுகின்றன. ஆசனங்களை செய்வதற்கு இலகுவாக நாம் அவற்றை மூன்று பிரிவாக வகுக்கலாம்.

**1. நின்ற நிலையில் செய்யும் ஆசனங்கள்.**
**2. இருந்த நிலையில் செய்யும் ஆசனங்கள்.**
**3. படுத்த நிலையில் செய்யும் ஆசனங்கள்.(மல்லாந்து, குப்புறமாக)**

மேற்கூறப்பட்ட மூன்று வகையான வகைப்படுத்தலில் எமது நடைமுறை வாழ்க்கைக்கு போதுமானவையான சுமார் 30 வரையிலான முக்கியமான ஆசனங்கள் விளக்கமாக தரப்படுகின்றன. ஒவ்வொரு ஆசனமும் தலா மூன்று தடவைகள் செய்யப்படல் வேண்டும். ஆனால் ஒரு சில ஆசனங்கள் (அதிகநேரம் செலவிட்டு செய்யும் ஆசனங்கள் சுமார் 3 நிமிடங்கள்) ஒரு தடவை செய்தால் போதுமானதாகும். மூன்று தடவைகள் செய்ய வேண்டிய ஆசனங்கள் அதிகபட்சமாக ஒரு நிமிடம் வரைச் செய்யலாம். ஆனால் 10 – 15 விநாடிகள் செய்தாலே போதுமானதாகும். பல ஆசனங்கள் மாற்றாசனங்களைக் கொண்டன. அவற்றை கட்டாயம் செய்ய வேண்டும். மேலும் ஆசனப்பயிற்சி செய்கையில் உடற்பயிற்சி செய்வது போல் வேகமாக – அவசரமாக – செய்யாது நிதானமாகவும் மெதுவாகவும் பொறுமையாகவும் சரியான சுவாசத்துடனும் செய்தல் வேண்டும்.

**முக்கியமான குறிப்புகள்:**

வாரம் ஒரு ஆசனம் என்ற பகுதி யோகக்கலை மீதான மக்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கச் செய்வதற்கான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடையதே ஆகும். ஆசனங்கள் யாவும் சரியான சுவாசத்தோடு தக்க குருவின் வழிகாட்டலுடன் முறைப்படி மட்டுமே செய்தல் வேண்டும். ஆசனங்கள் செய்கையில் கீழே குனியும் போதும் முன்பக்கம் அல்லது பக்கவாட்டாக வளையும் போதும் மூச்சினை வெளிவிட்டவாறும் மேலே நிமிரும் போது மூச்சை இழுத்தவாறும், பின்பக்கம் வளையும் போது மூச்சை இழுத்தவாறும் நிமிரும்போது வெளிவிட்டவாறும் சுவாச முறை இருத்தல் வேண்டும். உச்ச நிலையில் சாதாரண சுவாசம் கொள்க. சுவாசமும் அசைவும் ஏக காலத்தில் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆசனம் செய்த பின்பும் சில விநாடிகள் ஓய்வெடுக்கவும்.


(வளரும்)

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# பக்தி

பக்தி என்பது இறைவனிடம் நாம் கொண்டுள்ள பாசமாகும். நம்மில் பலரும் கடவுளிடம் எமக்கு வேண்டியவற்றைப் பெறுவதற்கு இறைவனிடம் பேரம் பேசுகிறோம். அதாவது நீ என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றினால் நான் உனக்கு இதைக் காணிக்கையாகத் தருகின்றேன் என்பது போல பேரம் பேசுகிறார்கள். இப்படி பேரம் பேசுவது பக்தி அல்ல வியாபாரம் ஆகும். இறைவனிடம் எதையும் எதிர்பாராமல் வழிபடலே பக்தி எனப்படும். நாம் உணர்வுபூர்வமாக அன்பும் பக்தியும் கொண்டு இறைவனைப் பிரார்த்திப்பது மட்டும்தான் உண்மையான பக்தி. இவ்வாறு பக்திக்கு விவேகானந்தர் கூறிய ஒரு கதையை பார்ப்போம்.

மன்னன் ஒருவன் காட்டில் வேட்டையாடச் சென்றான். அங்கே ஒரு முனிவரைக் கண்டான். அவருடன் உரையாடிவிட்டு பின்னர் மன்னன் முனிவரைப் பார்த்துத் தாங்கள் என்னிடம் இருந்து ஏதாவது பெற வேண்டும் என்று வேண்டினான். முனிவர் எனக்கு எதுவும் வேண்டாம், இப்போது நான் திருப்தியாக உள்ளேன், இந்த மரங்கள், நதிகள், குகைகள் எனக்கு உணவுக்கு, நீரிற்கு, உறங்க உதவுகின்றன என்றார். மன்னன் விடவில்லை. என்னை திருப்திப்படுத் தவாவது தாங்கள் என்னிடம் இருந்து ஏதேனும் பெற வேண்டும் என வற்புறுத்தினான். ஆதலால் முனிவர் அரண்மனைக்கு வர சம்மதித்தார். ஆதனால் மன்னன் முனிவரின் வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தான். முனிவர் அரண்மனைக்கு சென்றதும் வரவேற்பு நிகழ்ந்தது. மற்றும் பாதபூஜை போன்றன நிகழ்ந்தன. மன்னன் முனிவரை பூஜை அறைக்கு அழைத்துச் சென்றான். பூஜையறையில் மன்னன் இறைவனிடம் பொன்னும் பொருளும் தருமாறு வேண்டினான். அனைத்து வசதியிருந்தும் இறைவனிடம் இப்படி பிரார்த்தனை செய்தமையை கண்ட முனிவர் வெளியில் சென்றார். அதனைக் கண்ட மன்னன் என்னுடைய உபசாரத்தையும் நன்கொடையையும் ஏற்காமல் செல்லாதீர் என மன்றாடினான். அதற்கு முனிவர் கூறினார், ”பிச்சைக்காரனிடம் நான் எதையும் பெறுவதில்லை, நீயோ எப்போதும் இறைவனிடம்பிச்சை கேட்கிறாய், இந்நிலையில் நீ எனக்கு எதுவும் தர வேண்டியதில்லை. இறைவனிடம் எதையும் எதிர்பாராத பக்தியை மட்டும் செலுத்து” என அறிவுரை கூறினார். எனவே எதையும் எதிர்பாராமல் மனத் தூய்மையுடன் பக்தி செலுத்த பழகிக் கொள்ள வேண்டும்.



**லு.மதுஷா,**
**2023 கலைப்பிரிவு,**
**யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.**

# ஆட்சிக் கவிழ்ப்பு நோக்கம் அல்ல; அரசைப் பாதுகாக்கவே போராட்டம்

## பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அறிவிப்பு



ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அல்ல, அரசைப் பாதுகாக்கவே போராடுகின்றோம்என்றுஅறிவித்தல்விடுத்துள்ளனர் அரசபங்காளிக்கட்சிகளின்தலைவர்கள். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது எனவும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தனிவழி பயணத்துக்குத் தயாராகி வருகின்றனர் எனவும் வெளியாகும் தகவல்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

தேசிய வளங்களையும், நாட்டையும் பாது காக்கவே 69 லட்சம் பேர் எமது அணிக்கு வாக்களித்தனர். எனவே, மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காக நாம் அரசுக்குள் இருந்துகொண்டு போராடுவோம்.

ஆட்சிமாற்றமோ, ஆட்சிக்கவிழ்ப்போ எமது நோக்கம் அல்ல. இந்த அரசை முன்னோக்கி அழைத்துச் சென்று, நாட்டைப் பாதுகாக்க வேண்டும். பிரச்சினைகள் உள்ளன. அவற்றை பேச்சு மூலம் தீர்க்கவே முற்படுகின்றோம் என்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# சீண்டிப் பார்த்தால் சிதறிப் போவீர்கள்!

## கோட்டாவுக்கு சம்பந்தன் எச்சரிக்கை



**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் பேசும் மக்களின் மனதைச் சீண்டிக் கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படாது. ஒட்டுமொத்தத்தமிழ்பேசும்மக்களின் வெறுப்பின் வெளிப்பாட்டைத் தான் காலப்போக்கில் ஜனாதிபதி சந்திப்பார்.**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

-ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.

-இலங்கை அரசமைப்பின் 33ஆம் உறுப்புரையில், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணியின் தலைவராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்ற - பின்னர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கல கொட அத்தே ஞானசார தேரர் நிய மிக்கப்பட்டுள்ளார்.

-சிறைத்தண்டனை அனுபவித்த - தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இன வாதக் கருத்துக்களை வெளியிட்டு வரும் ஒருவரை ஜனாதிபதி செயலணியின் தலைவராக எந்தவகையில் ஏற்றுக் கொள்ள முடியும்?

13 உறுப்பினர்களைக் கொண்ட இந்த விசேட ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை. இது ஜனாதிபதியின் திட்டமிட்ட செயலா?

ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் தனக்குரிய அதிகாரங்களைப் பயன் படுத்தி குழுக்களை - செயலணிகளை நியமிக்கலாம்.

ஆனால், இவ்விதமான தான்தோன் றித்தனமான செயற்பாடுகள் நாட்டினுடைய ஒற்றுமை, சமத்துவம், நீதி, கௌரவம் போன்ற கருமங்களில் மிகவும் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி இவ்விதமான கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படுவது மிகவும் கஷ்டம்; அது ஏற்படாது.

ஆனபடியால் ஜனாதிபதி இவ்விதமான கருமங்களைச் செய்கின்றபோது அவற்றை நாட்டு மக்கள் - விசேடமாக தமிழ்பேசும் மக்கள் - தமிழ் மக்கள் ஏற் றுக்கொள்வார்கள் என்று நினைக்கக் கூடாது. அதை அவர்கள் வெறுப்பார்கள்.

அந்த வெறுப்பின் வெளிப்பாட்டைக் காலப் போக்கில் அவர்கள் வெளிக் கொணர்வார்கள். அதுதான் நிலைமை - என்றார்.



## அரச நிறுவனங்களுக்கு

# 164 வாகனங்கள் நேற்று கோட்டாவால் கையளிப்பு

துறைசார் அலுவல்களுக்குத் தேவையான அம்புலன்ஸ் வாகனங்கள் 50, தண்ணீர் பவுஸர்கள் 52, டபிள் கப் ரக வாகனங்கள் 62 உள்ளிட்ட 164 வாகனங்களை, உரிய அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்படி, சுகாதார அமைச்சு மற்றும் சுவசெரிய அம்புலன்ஸ் சேவைகளுக்கு 50 அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டமையோடு, வனஜீவராசிகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு, தண்ணீர் பவுசர்கள் மற்றும் டபள்கப்ரகவாகனங்கள் கையளிக்கப்பட்டன.

அமைச்சர்களாக ஜனக பண்டார தென்னகோன், கெஹலிய ரம்புக்வெல, சி.பீ.ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல உள்ளிட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்ட 150 மோட்டார் சைக் கிள்களைப் பொலிஸ் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வும், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்கள், இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் போக்குவரத்துச்சேவைக்குப்பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்கள், ஜனாதிபதியால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்ன ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பானியத் தூது வர் சுகியாமா அக்கிரா மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வாகன விபத்தில் 6 பேர் படுகாயம்!



(ந.லோகதயாளன்)

யாழ்.,தென்மராட்சி, சாவகச்சேரி - தனங்கிளப்பு பகுதியில் நேற்றுகாலைடிப்பர்வாகனமும் பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிநோக்கிச்சென்றுகொண்டிருந்த பட்டா ரக வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 6 பேரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஒற்றுமைக்கான சைக்கிள் ஓட்டம்



**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

சர்தார் வல்லபாய் படேலின் 146 ஆவது பிறந்த நாள் மற்றும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டு தினத்தையொட்டி 'ஆசாதிகா அம்ரித்ம ஹோற்சவ்' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஒற்றுமைக்கான சைக்கிள் ஓட்ட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வை யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் நடத்தியது.

இதன்போது யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரிகள், தூதரகத்திலிருந்து சைக்கிளில் பயணித்து நாவற்குழி பகுதியில் சிவபூமி அறக்கட்டளை யின் கீழ் அமைந்துள்ள சிவபூமி (துட்சணாமூர்த்தி) கோயிலை அடைந்தனர்.

அங்கு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜை வரவேற்றார்.

தொடர்ந்து 'உலகம் ஒரு குடும்பம் எனும் வசுதைவ குடும்பகத்தின்' வழி காட்டுதலின் பேரில், இந்தியத் துணைத் தூதுவர், துணைத் தூதரகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து இந்திய மற்றும் இலங்கை மக்களின் நல்வாழ்வுக்காக சிறப்பு வழிபாடு செய்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ்பேசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எழுப்பினார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாடு ஒரு சட்டம் என்பது தொடர்பாக ஞானசார தேரர் தலைமையில் 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற பல மொழிகள், பல மதங்கள், பல கலாசாரங்கள் கொண்ட, வேறுபட்ட இனங்கள் வாழக்கூடிய நாட்டிலே பல்வேறு விதமான சட்ட திட்டங்கள் இருப்பது என்பது இயல்பானது. உலகத்திலும் பல்வேறு பட்ட சட்டங்கள் இருக்கின்றன. அமெரிக்காவின் சில மாநிலங்களில் மரண தண்டனை சட்டம் இருக்கின்றது. சில மாநிலங்களில் இல்லை.

இலங்கையிலும் கூட யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம், கண்டியச் சட்டம், ஷரியாத் சட்டமென ஒவ்வொரு சட்டங்கள் காணப்படுகின்றன. இவை இன்று நேற்றல்ல, நீண்டகாலமாக வழிவழியாக வந்த சட்டங்களே அவை. அது இன்றுவரை நடைமுறையில் இருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையில்தான் ஜனாதிபதியால் ஒரே நாடு ஒரே சட்டம் என்பதன் அடிப்படையிலேயே இலங்கையினுடைய மிக மோசமான இனவாதி எனக் கூறப்படும் ஞானசார தேரரின் தலைமையில் ஒரு செயலணி உருவாக்கப்பட்டிருக்கின்றது.

பர்மாவில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் கொலைசெய்யப்பட்டபோது அதற்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டவர் இவரே. இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை தொடர்ச்சியாக பேசிக்கொள்ளக் கூடியவர் இவர்.

இவர் முல்லைத்தீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணியில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தவர். நீதிமன்றத்தின் கட்டளைகளை ஏற்க மறுத்ததன் காரணமாக அவரை நீதிமன்றம் தண்டித்து சிறைத் தண்டனை வழங்கி இருந்தது. அதன் பின்பு பொது மன்னிப்பில் விடுதலையானார்.

இவ்வாறான ஒருவரது தலைமையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்று பேசுகின்றபோது கேலியாகவும் சிரிப்புக்கிடமாகவுமே காணப்படுகின்றது. இந்த நாடு எதனை முன்னெடுத்துச் செல்கின்றது என்பது பெரிய கேள்வியாக இருக்கின்றது.

மிகமோசமான இனவாதியைக் கொண்டுவந்து ஒரே நாடு ஒரே சட்டம் என்று சொல்லச் சொன்னால் தமிழர்களையும் முஸ்லிம்களையும் இந்த நாட்டில் இருந்து விரட்டுவதும், அவர்களுக்கு எதுவுமே இல்லாமல் செய்வதும்தான் இவர்களது நோக்கமா என்கின்ற கேள்வி எழுகின்றது.

ஒரே நாடு ஒரே சட்டம் மாகாண சபைகளை இல்லாமல் செய்கின்ற, மாகாண சபைகளுக்கு சட்டமியற்றும் உரிமையை இல்லாமல் செய்கின்ற அடிப்படையில் இவ்வாறான ஒரு புதிய முயற்சியை உருவாக்குகிறார்களா என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாதிபதி பதவிக்கு வந்தபொழுது சிங்கள பௌத்தத்தை பாதுகாப்பதே எனது கடமை என்றார். சிங்கள பௌத்தத்தை பாதுகாத்தல் என்பது வேறு, தமிழ், முஸ்லிம் இனங்களை, அவர்களது கலாசாரங்களை, சட்டதிட்டங்களை, நடைமுறைகளை இல்லாமல் செய்வதென்பது வேறு.

அரசு இப்போது எடுக்கக்கூடிய முயற்சி என்பது தேசிய இனங்களான வடக்கு, கிழக்கு தமிழர்களாக இருக்கலாம், முஸ்லிம்களாக இருக்கலாம், மலையகத் தமிழர்களாக இருக்கலாம். அவர்களுக்கான பண்பாடு, கலாசாரம் என்பதை இல்லாமல் செய்து, இது சிங்கள பௌத்த நாடு என்ற அடிப்படையில் இந்தச் சட்டங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவா என்ற சந்தேகம் எல்லோர் மனதிலும் எழுந்திருக்கின்றது.

இவ்வாறான செயலணியில் தமிழர்கள் இல்லை என்று பலரும் கூறுகின்றனர். இவ்வாறு நியமிக்கப்படுபவர்களின் நோக்கம் என்ன? அரசின் சொல்லுக்கு தலையாட்டுபவர்களே?

இதிலே முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டு இருந்தாலும்கூட முஸ்லிம்களுக்கு இதனால் உபகாரங்கள் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. தங்களுக்கு தலையாட்டக்கூடிய சிலரை நியமித்து எதனையும் சாதிக்கப் போவது கிடையாது. இது கண்டிக்கப்பட வேண்டியதுடன் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

## 'ஒரே நாடு - ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையினுடைய ஜனாதிபதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 'ஒரு நாடு ஒரு சட்டம்' ஒன்றை அமுல்படுத்துவதற்கான ஒரு குழுவை நியமித்து அதிலே வணக்கத்துக்குரிய ஞானசார தேரரை தலைவராகக் நியமித்திருக்கிறார்.

ஞானசார தேரர் ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு காரணமாகத் தண்டிக்கப்பட்டு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு வெளியில் வந்தவர். எத்தனையோ சர்ச்சைகளில் சிக்கியவர். அப்படிப்பட்ட ஒருவரை ஒரு நாடு ஒரு சட்டம் என்கின்ற செயலணிக்கு நியமித்துள்ளார். அதிலே பெயருக்குக் கூட ஒரு தமிழர் இல்லை.

அப்படி என்றால் இந்த நாடு தமிழர்களுக்கு சொந்தம் இல்லையா? இந்த நாட்டிலே தமிழர்களுக்கு வாழ்வதற்கான உரிமை இல்லையா? அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லை என்று சொல்கிறீர்களா? என்று ஜனாதிபதியை நாங்கள் கேட்கின்றோம்.

நாங்கள் இந்தச் செயலணி மூலம் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லை என்று அறிவிக்க என்ன தடை இருக்கின்றது?

தனிநாட்டை உருவாக்கி செல்லுங்கள் என்றால் அதற்கும் நாங்கள் ஆயத்தமாகவே இருக்கின்றோம்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்று கூறும் குழுவை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெற வேண்டும். இந்த குழுவைக் கலைக்க வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்க முன்னரே இவ்வாறான அவசரமான வேலைகளை ஏன் செய்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது - என்றார்.

## 11 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

11 ஏக்கர் காணிகள் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 7ஆம் வட்டாரப் பகுதியில் இதுவரை இராணுவப் பயன்பாட்டில் உள்ள 11 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்குரிய ஆவணத்தை முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பிலப்பிட்டிய மாவட்ட அரச அதிபர் க.விமலநாதனிடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை அமைந்திருந்த காணி தவிர்ந்த ஏனைய புதுக்குடியிருப்பு நகரத்துக்கு அண்மையாகவுள்ள மக்களின் காணிகளே இன்று விடுவிக்கப்பட்டன.

பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை இருந்த காணி தொடர்ந்தும் இராணுவத்தினர் வசமே உள்ளது.

தமக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்குமாறு கோரி 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் காணி உரிமையாளர்களால் குறித்த இராணுவ முகாமுக்கு முன்பாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதன் பயனாக ஏழு ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் மேலதிக காணியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலைகொண்டிருந்தது.

682ஆவது படைப்பிரிவு தலைமையத்தில் நேற்று நடைபெற்ற காணி விடுவிப்பு நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயக்காந் மற்றும் காணிப்பகுதி அதிகாரிகள், கிராமசேவையாளர் மற்றும் 68 ஆவது படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கைக்கான உதவிகள் தொடரும்!

## மஹிந்தவிடம் சீனத் தூதுவர் வாக்குறுதி



இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக் கான சீனத் தூதுவர் சீ.ஷென் ஹொன் முன்னிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பாராட்டைத் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சீனத் தூதுவர் சீ.ஜென்ஹொனை நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்தித்த போதே இவ்வாறு கூறினார்.

கொரோனாத் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு வாழ்த்துத் தெரிவித்த சீனத் தூதுவர் சீ.ஜென்ஹொன், அதற்கு சீன அரசின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சீன மக்கள் வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி இடையிலான 10 பில்லியன் சீன யுவான் மதிப்பிலான இருதரப்பு நிதி பரிமாற்ற ஒப்பந்தமானது, உலகளாவிய முதலீட்டாளர்களின் உணர்வை வலுப்படுத்தவும், இலங்கையின் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் சீனத் தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 65 ஆண்டு நிறைவு மற்றும் இறப்பர் அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமை ஆகியவற்றைக் குறிக்கும் 2022ஆம் ஆண்டானது, இலங்கை - சீன இருதரப்பு உறவின் மிக முக்கியமான ஆண்டாக விளங்கும் எனவும் சீனத் தூதுவர் சீ.ஜென்ஹொன் நம்பிக்கை தெரிவித்தார்.

# யாழ். ஸ்ரான்லி வீதி அகலிப்புப் பணியில் ஆளும் கட்சியினர் இடையே பலப்பரீட்சை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி அகலிப்புப் பணியில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலப் பரீட்சை இடம்பெறுகின்றது என வீதி வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை வர்த்தகர்கள் மற்றும் பயணிகளின் நன்மை கருதி அகலிப்பு செய்து தருமாறு யாழ்ப்பாணம் மாநகர சபை 2019ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்தது. இதன் பெயரில் பிரதேச செயலக ஒத்துழைப்புடன் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஓர் ஒப்பந்த நிறுவனம் மூலம் வீதி அகலிப்பு செய்யப்படுகின்றது.

இவ்வாறு இடம்பெறும் பணியின் போது ஸ்ரான்லி வீதியில் உள்ள சிறீதர் தியேட்டர் முன்பாக வீதியை நோக்கி 7 அடி நீளத்தில் இருந்த அலங்கார தொட்டி இடித்து அகற்றப்பட்டது. இதன்போதே சர்ச்சை உருவெடுத்து உடைக்கப்பட்ட அலங்காரத் தொட்டி மீண்டும் அமைக்கப்படுகின்றபோதும் வர்த்தகர்களின் கடைகள் மட்டும் தொடர்ந்தும் இடிக்கப்படுகின்றன.

இவ்வாறு கடைகள் மட்டும் இடிக்கப்படும்போது சிறீதர் தியேட்டர் முன்பாக அரசியல் கட்சிக்காக அமைக்கப்படுகின்றதாகக் கூறும் குற்றச்சாட்டுத் தொடர்பில் மாநகர சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஸ்ரான்லி வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்டது என்ற வகையில் அனைத்துப் பணிகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபையே முன்னெடுக்கின்றதே அன்றி அதற்கும் மாநகர சபைக்கும் தொடர்பு கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறானால் சிறீதர் தியேட்டருக்கு மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு என வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டபோது, விதிவிலக்கு அல்ல அனைவரின் ஒப்புதலை பெற்றே இடிக்கும் பணி இடம்பெறும் நிலையில் ஒப்பந்தக்கார நிறுவனத்தினர் சிறீதர் தியேட்டரில் உள்ளவர்களின் அனுமதியைப் பெறாமல் இடித்துவிட்டனர். இதனால் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்தமையால் மீளக் கட்டிக்கொடுக்கப்படுகின்றது என்றனர்.

இது தொடர்பில் ஈ.பி.டி.பியினரின் கருத்தைத் தேடியபோது வீதி அகலிப்புப் பணியை எடுத்துள்ளது ஓர் அரசியல்வாதியின் ஆதரவாளர் என்ற அடிப் படையில் அவர்கள் ஒழிவந்து எந்தவொரு தகவலும் இன்றி எமது கட்டுமானத்தையே முதலில் இடித்தமையினாலேயே அதனை மீள அமைக்குமாறு கோரினோம் என்கின்றனர்.

இதேநேரம் இந்த ஒப்பந்தகாரருக்கும் எமக்கும் தொடர்பில்லை என்கின்றனர் நாடாளுமன்ற உறுப்பினர் தரப்பு.

## 'மொட்டு'வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக கொரோனாத் தொற்று நிலைமை மற்றும் அதிபர் - ஆசிரியர் சம்பளப் பிரச்சினையின் தற்போதைய நிலை, கொரோனா தொற்றுக்கு மத்தியில் சுற்றுலாத்துறை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், இலங்கைத்துறைமுக அதிகார சபையின் மேற்கு மற்றும் கிழக்கு முனைய அபிவிருத்தி, அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்காணித்தல், பொருள்களின் விலையேற்றம் மற்றும் இயற்கை விவசாயம் மற்றும் உரம் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் கவனம் செலுத்தினர்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, டக்ளஸ் தேவானந்தா, காமினி லொகுகே, பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, நாமல் ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஏ.எல்.எம்.அதாவுல்லா, டிரான் அலஸ், வீரசுமன வீரசிங்க, கெவிந்து குமாரதுங்க உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.